# தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - II

# மற்றும் கூடுதல் நிதி உதவித் திட்டம்

# மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பு,2020

## திட்டம் – ஓர் அறிமுகம்

1. தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் –II- இன் கீழ், சுமார் 600 கி.மீ மாநில நெடுஞ்சாலைகளை இரு வழித்தட / நான்கு வழித்தட சாலைகளாக மேம்படுத்தும் பணியும், மேலும் சுமார் 600 கி.மீ மாநில நெடுஞ்சாலைகளை பராமரிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாலையின் தன்மை மற்றும் திறனை மேம்படுத்துவதன் மூலம் மாநிலங்களின் சாலை போக்குவரத்து செயல்திறனை மேம்படுத்துவதும், மாநில நெடுஞ்சாலைத் துறையின் திட்டமிடுதல், செயல்படுத்துதல், பராமரித்தல் ஆகிய திறனை மேம்படுத்துதலும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு உலக வங்கியின் உதவி பெற்று, 428 கி.மீ நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், 10 சாலை தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டு, பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமான ஒப்பந்தம் மூலமும், மேலும் 146 கி.மீ நீளமுள்ள 3 சாலை பணிகள் பொது தனியார் கூட்டு ஒப்பந்தம் மூலமும், அங்கீகரிக்கப்பட்ட மறுகுடியமர்வு கொள்கையின் அடிப்படையில், தனித்தனியாக மறுகுடியமர்வு செயல் திட்டம் தயாரித்து, செயல்படுத்தபட்டு வருகின்றன. தற்போது மேலும் 111 கி.மீ துாரமுள்ள 7 சாலைத் திட்டங்களை மேம்படுத்துவதற்காக உலக வங்கியில் இருந்து கூடுதல் நிதி உதவி பெற தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

2. இந்த திட்டங்கள், சமுதாயத்திற்கு தேவையான பல நல்ல பயன்களைக் கொடுக்கும். ஏனென்றால், இத்திட்டங்களின் மூலம் மேம்படுத்தப்பட்ட சாலைகள் கிடைக்கும். அதன் பலனாக போக்குவரத்து வசதிகள் பெருகி அதிகமான வேலை வாய்ப்புகள் உருவாகும். சந்தைகள், சுகாதார மையங்கள், பள்ளிகள் போன்றவற்றிற்குச் செல்ல நல்ல போக்குவரத்து வசதி கிடைக்கும். சிறந்த சாலையால் பயண நேரமும் குறையும். அதே நேரத்தில் இத்திட்டத்தால் சில பாதிப்புகளும், விளைவுகளும் ஏற்படும். அவற்றுள் திட்டம் மேற்கொள்ளப்படும் பகுதியில் நிலம் கையகப்படுத்துதல் மூலம் ஏற்படும் தாக்கம் மற்றும் வீடுகள், சிறிய கடைகள், வழிபாட்டுத்தலங்கள் போன்ற பொதுப் பயன்பாட்டு இடங்கள் பாதிக்கப்படுவது அல்லது இழப்பது போன்ற தாக்கங்கள் ஏற்படலாம்.

**திட்டத்தின் தாக்கம் அல்லது விளைவுகள்**

**3.** இந்த திட்டத்தில், நில எடுப்பால், நில உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதுடன், பொது இடத்தை ஆக்கிரமித்து உள்ளவர்களும், சொந்த இடத்துக்கு அருகில் உள்ள பொது இடத்தை ஆக்கிரமித்து உள்ளவர்களும் பாதிக்கப்படுவார்கள். தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களால், 169 ஹெக்டர் தனியாருக்கு சொந்தமான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, 1566 குடும்பங்கள் அதிகமான பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். உலக வங்கியின் கூடுதல் நிதியுதவியினால் கையகப்படுத்தப்படவுள்ள நிலங்களும் அதனால் ஏற்படும் பாதிப்புகளும் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. விரிவான பொறியியல் வடிவமைப்பு தயாரிக்கப்பட்டவுடன் பாதிக்கப்பட்ட நபர்களிடம் சமூக பொருளாதார கணக்கெடுப்பு நடத்தப்படும். சமூக தாக்க மதிப்பீடானது, பாதிக்கப்பட்ட நபர்களின் இடம்பெயர்வு மற்றும் வருங்கால இழப்புகளின் அளவை தீர்மானிக்கவும், ஊறுபடக் கூடிய வகையினரை அடையாளம் காணவும், மறு குடியமர்விற்கான செலவுகளை கண்டறியவும், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு திட்டத்தை செயல்படுத்தவும் பயன்படுகிறது.

**மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பு (RPF)**

**4.** தமிழக அரசின் நெடுஞ்சாலைத் துறையின் ''தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II இன் கீழ் அமைக்கப்பட்டுள்ள ''திட்ட செயலாக்க அலகு'', இத்திட்ட மேம்பாட்டு பணியின் போது ஏற்படக் கூடிய எதிர்மறையான சமூக தாக்கங்களைத் தவிர்க்க, குறைக்க மற்றும் தணிப்பதற்கான அணுகு முறை மற்றும் நெறிமுறைகள் அடங்கிய, ''மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பு'' ஒன்று 2014 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

**5.** கடந்த ஆறு ஆண்டுகளில் நடைமுறைக்கு வந்த நில எடுப்பு, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு சம்பந்தமான, தேசிய மற்றும் மாநில சட்டங்கள், கொள்கைகள், நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான அரசாணைகள், விளக்கங்கள், உலக வங்கி சமூக பாதுகாப்புக் கொள்கைகள், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு தொடர்பான இடைக்கால மதிப்பீடுகளிலிருந்து கற்றுக் கொள்ளப்பட்ட பாடங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, 2014 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பில் திருத்தங்கள் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டதால், திருத்தங்கள் உள்ளடக்கிய, இந்த ''மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பு, 2020'' உருவாக்கப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II-இன் கீழ் செயல்படுத்தப்படும் மற்றும் செயல்படுத்தவுள்ள சாலை திட்டங்களுக்கும், கூடுதல் நிதி உதவியின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள சாலை திட்டங்களுக்கும், சமூக பாதிப்புகள் ஆராயப்பட்டு, நிதி ஆதாரம் அல்லது நிதி முறைகள் எவ்விதமாக இருப்பினும், இந்த ‘‘மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பு, 2020’’ பின்பற்றப்படும். மேலும், பொது, தனியார் கூட்டு ஒப்பந்தம் மூலம் செயல்படுத்தவுள்ள சாலை திட்டங்களுக்கும் சமூக பாதிப்புகள் ஆராயப்பட்டு, இந்த கொள்கை கட்டமைப்பு பின்பற்றப்படும்.

**மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பின் அடிப்படை**

7. இந்த மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பானது தேசிய–மாநில சட்டங்களை அடிப்படையாக கொண்டது. நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமை சட்டம், (மத்திய சட்டம் 30/2013), 2013, தமிழ்நாடு, நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமை விதிகள், 2017, தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம், 2001; தமிழ்நாடு நெடுஞ்சாலை விதி, 2003 மற்றும் விருப்பமில்லா மறு குடியமர்விற்கான உலக வங்கியின் செயல்பாட்டுக் கொள்கை ஆகிவற்றின் அடிப்படையில், இந்த மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பானது உருவாக்கப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம், 2001 ன் விதிகளின்படி நிலம் கையகப்படுத்தப்படும். மேலும் நிலத்திற்கான இழப்பீடானது, நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமை சட்டம், (மத்திய சட்டம் 30/2013), 2013 வழிகாட்டுதலின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு, நில எடுப்பு அலுவலரால் வழங்கப்படும். நிலத்திற்கான இழப்பீட்டில், நிலம் மற்றும் நிலத்துடன் கூடிய அனைத்து சொத்துக்களும் அடங்கும். 2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமை (RFCTLARR) சட்டத்தின் வழிகாட்டுதலின்படி, நிலத்திற்கான இழப்பீட்டிற்கும் மற்றும் மறுவாழ்வு, மறு குடியமர்வு உதவித் தொகைகளுக்கும் வருமான வரிப்பிடித்தம் இருக்காது.

**உரிமை வழங்கல்அட்டவணை**

**9.** சாலை அமைக்கும் பணியால், தாக்கத்திற்கு உள்ளாவோர் பெறக்கூடிய உரிமைகள் இந்த அட்டவணையில் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஏற்படக்கூடிய இழப்புகள் மற்றும் பாதிப்புகளுக்கு, அதற்குரிய இழப்பீடு, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உதவிகள், அதற்குரிய உரிமைத் தகுதிகள் என்னென்ன என்பது பற்றிய விபரங்கள் இதில் வரையறுக்கப்பட்டிருக்கிறது பாதிக்கப்படும் ஊறுபடக்கூடிய வகையினருக்கு கூடுதல் உதவிகள், இழப்பீடு, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உதவிதொகையில், பெண்களின் பெயரில், நிலம் / சொத்துக்களை வாங்குபவர்களுக்கு பதிவுக்கட்டணம் மற்றும் முத்திரை வரியை திருப்பிச் செலுத்துதல், இடம் பெயர்ந்தவர்களுக்கு, கட்டிய வீடு அல்லது அதற்கு ஈடான பண உதவி, ஆகியவை உரிமை வழங்கல் அட்டவணையில் உள்ள சில உதவிகளாகும்.

**10.** இடமாற்றத்திற்குள்ளான வீடுகள், கட்டிடங்கள், மற்ற அசையா சொத்துக்கள் போன்றவற்றின் மதிப்பீடு, அன்றைய தேதியில் உள்ள பொதுப்பணித்துறையின் தர விலை விகிதப் பட்டியலின் கீழ் (plinth area rates) (தேய்மானத்தை கணக்கில் கொள்ளாமல்) நிர்ணயிக்கப்படும். மரங்களுக்கான இழப்பீடு, சந்தை மதிப்பின்படியும், பயிர்கள் மற்றும் பலன் தரும் மரங்களுக்கான இழப்பீடானது, வனத்துறை, வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத்துறை மதிப்பீட்டின் அடிப்படையிலும்,, நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு அலகுகளால் (LARRU) நிர்ணயிக்கப்படும். நிலம் அல்லது சொத்துக்களை கையகப்படுத்துவதற்கு முன், இழப்பீடு மற்றும் உதவித் தொகைகள் முழுமையாக வழங்கப்படும். இழப்பீடு மற்றும் உதவித் தொகைகள் வழங்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் இடிபொருள்களை எடுத்துக் கொள்ளவும் பயிர்கள் / மரங்களைஅறுவடை செய்து கொள்ளவும், பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உரிமை வழங்கப்படும்.

# பாதிப்புகளுக்கான இழப்பீடு அட்டவணை

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| பிரிவு– 1 உடைமையாளர்கள் – தனியார் உடைமை பாதிப்பு | | | | |
| 1 | **நில இழப்பு**<br>**(விவசாயம்/குடியிருப்பு/ வணிகம்/இதர வகைகள்)** | **அ** | நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமை சட்டம், 2013 இன் கீழ் இழப்பீடு கொடுத்து நிலம் கையகப்படுத்தப்படும்.<br><br>**(அல்லது)**<br><br>தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டத்தின்படி நில எடுப்பிற்காக நிர்ணயிக்கப்படும் தொகையைவிட 25% கூடுதல் தொகை வழங்கப்பட்டு, நில உரிமையாளரின் ஒப்புதலுடன் நிலம் கையப்படுத்தப்படும். (நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமை சட்டம், 2013இன்படி நிலம் கையப்படுத்தலுக்கான இழப்பீடு நிர்ணயிக்கப்படுகிறது) | தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001, இன்கீழ் அதிகாரியால் நில எடுப்பு செய்யப்படும்<br><br>**i.**இந்திய பத்திரப் பதிவு சட்டம் 1899 இன் கீழ் நில விற்பனை அல்லது நில விற்பனை ஒப்பந்தம் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ள சந்தை மதிப்பு (வழிகாட்டி மதிப்பு )<br><br>(அல்லது)<br><br>**ii.**அதே பகுதியிலோ அதற்கு அருகில் உள்ள பகுதியிலோ, அதே வகை நிலத்திற்கு கடந்த மூன்று வருடங்களில் பதிவு செய்யப்பட்ட கிரையங்களில் / கிரைய ஒப்பந்தப் பத்திரங்களில் அதிக விற்பனை விலைகளில் பதிவு செய்யபட்ட 50 சதவிதம் சாரசரி விற்பனை மதிப்பு.<br><br>இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் நில மதிப்பினை, தமிழக அரசு அறிவித்துள்ள ஊரகப்பகுதி சந்தை மதிப்பிற்கான பெருக்கு காரணி (multiplying factor) உடன் |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | | கணக்கிடப்பட்டு, அத்தொகைக்கு 100% ஆறுதல் தொகையும் 15(2) அறிவிப்பு வெளிவந்த தேதியிலிருந்து 12 சதவிகித கூடுதல் சந்தை மதிப்பு வழங்கப்படும்.<br><br>பாதிக்கப்பட்ட நிலத்தின் உரிமையாளர் விருப்பம் இருந்தால், உபயோகப்படுத்த முடியாமல் இருக்கும் மீதமுள்ள நிலத்தையும் கையகப்படுத்துமாறு கோர வாய்ப்பு அளிக்கப்படும். |
| | | **ஆ** | **விவசாய நில உரிமையாளர்கள்**<br>கையகப்படுத்தப்படும் நிலமானது, நிலத்தை இழந்தவருக்கு முதன்மை வருமானஆதாரமாக இருந்து, நில எடுப்பினால் வாழ்வாதாரத்தை இழந்தவருக்கு வருடாந்திர உதவித் தொகைக்கு பதிலாக ஒரே தவணையாக ரூ.5,82,020/— வழங்கப்படும். | பாதிப்புக்குள்ளாகும் குடும்பத்திற்கு நில எடுப்பிற்கு உட்படும் நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் மட்டுமே முதன்மை வருமானமாக இருந்தால் குடும்பத்தின் (கையகப்படுத்தும் நிலத்தால் குடும்பத்தின் ஆண்டு வருமானத்தில் 1/3 பங்கு இழப்பு ஏற்பட்டால்) அந்த நில எடுப்பானது வாழ்வாதார இழப்பாகக் கருதப்படும். |
| 2 | குடியிருப்புகள் இழப்பு | | **வரிசை எண்: 1 (அ) ல் உள்ள பட்டியலில் விவரிக்கப்பட்டுள்ள நில இழப்பீடுத் தொகையுடன் கீழ்கண்ட நிவாரணங்களும் வழங்கப்படும் .** | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | அ | தேய்மானத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் கட்டுமானங்களுக்கு பொதுப் பணித்துறையின் அன்றைய தேதியிலான ''விலை நிர்ணய அட்டவணைப்படி ரொக்க இழப்பீடும் 100% ஆறுதல் தொகையும் வழங்கப்படும். | கட்டிடத்தின் ஒரு பகுதி பாதிப்படைந்திருந்து, எஞ்சியுள்ள பகுதியை பயன்படுத்த முடியாது என்ற நிலையில் இருந்தால், ஒட்டு மொத்த கட்டுமானத்திற்கும் இழப்பீடு கோர உரிமை உண்டு. ( * ) |
| | | ஆ | கட்டுமான இடிபொருள்களை எடுத்துச் செல்ல உரிமை உண்டு. | |
| | | இ | மாட்டுக் கொட்டகையை இழப்பவர்களுக்கு ஒரு முறை உதவித்தொகையாக ரூ. 34,980/– நிதியுதவி வழங்கப்படும். | |
| | | ஈ | இத்திட்டத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர நேரிடும் சுயதொழில் புரிபவர்கள் அல்லது கைவினைஞர்களின் குடும்பத்திற்கு ஒரு முறை உதவித்தொகையாக ரூ. 34,980/– நிதியுதவி வழங்கப்படும். | |
| | | உ | இடம் பெயர்க்கப்பட்டவர்களுக்கு கிராமப்புறமாக இருந்தால் மத்திய அரசின்–PMAY வரையறையின் படியான வீடு அல்லது நகர்ப்புறமாக இருந்தால் 50 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட வீடு /அடுக்கு மாடி குடியிருப்பில் வீடு அல்லது விரும்பினால் வீட்டிற்கு பதிலாக ரொக்கத் தொகை வழங்கப்படும். வீட்டிற்குப் பதில் ரொக்கம் பெற விரும்புவோர்க்கு மத்திய அரசு | புதிய வீட்டு மனைகள் அல்லது வீடுகளைப் பொறுத்தமட்டில் முத்திரைத்தாள் கட்டணமும் பதிவுக் கட்டணமும் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும்.<br><br>அவ்வீட்டு இல்லத்தரசி அல்லது அக்குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் பெயரில் மட்டுமே பட்டா அளிக்கப்படும். |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | அளவுகோளின்படி கிராமப்பகுதியாக இருந்தால் ரூ.1,70,000/- மும் [PMAY(G)] நகர்புறமாக இருந்தால் ரூ.2,10,000/-மும் [PMAY(U)] வழங்கப்படும். | மறு குடியமர்த்தப்படும் இடங்களில் நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்விற்கான உரிமை சட்டத்திற்கு ஏற்ப அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் அளிக்கப்படும்.<br><br>மக்கள் தாங்கள் தற்போதிருக்கும் இடத்திலிருந்து தாங்களாகவே இடமாற்றம் செய்துகொள்ள அவர்களுக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்படும். |
| | | **ஊ** | திட்டத்தினால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர வேண்டிய குடும்பத்திற்கு ஒரு முறை உதவித்தொகையாக பிழைப்பூதியமாக ரூ.**50,370/–** வழங்கப்படும். | |
| | | **ஏ** | திட்டத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர வேண்டிய குடும்பத்திற்கு இடம்பெயர உதவித்தொகை (shifting Allowance) ரூ.69,950/- வழங்கப்படும். | |
| | | **ஏ** | இடம்பெயர வேண்டிய பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.69,950/- ஒரு முறை உதவித்தொகையாக மறு குடியமர்வு உதவித்தொகை வழங்கப்படும். | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | ஐ | கையகப்படுத்தப்பட்ட குடியிருப்பு இடத்தின் உரிமையாளருக்கு, இதன்மூலம் கிடைக்கும் வாடகை வருமானம்தான் முதன்மையான வருமான ஆதாரமாக இருந்து, இந்த கையகப்படுத்துதல் மூலம் அவர்களுடைய வாழ்வாதாரம் பதிக்கப்படும் நிலையில், வருடாந்திர உதவிதொகைக்குப் பதிலாக, அவர்களுக்கு, ஒரே தவணையாக ரூ.5,82,020/– வழங்கப்படும். | எந்தவொரு பாதிக்கப்பட்ட குடும்பமும், தங்களது வாழ்வாதாரமாக, (கையகப்படுத்தும் குடியிருப்பு நிலத்தால் குடும்பத்தின் ஆண்டு வருமானத்தில் 1/3 பங்கு இழப்பு ஏற்பட்டால்) கையகப்படுத்தப்படும் குடியிருப்பு கட்டுமானத்திலிருந்து கிடைக்கும் வாடகை வருமானத்தையே முதன்னமயான ஆதாரமாக நம்பியிருந்தால், அது வாழ்வாதார இழப்பாகக் கருதப்படும். |
| 3 | வணிகக்கட்டுமானங்கள் இழப்பு | <br><br><br><br>அ. | **மேலே கண்ட வரிசை எண் 1 (அ)– ல் கூறப்பட்டுள்ள நிலத்திற்கான இழப்பீட்டுடன் கீழ்கண்ட நிவாரணங்களும் வழங்கப்படும்.**<br><br>பொதுப்பணித் துறையின் அன்றைய தேதியிலான “விலை நிர்ணய அட்டவணை” ப்படி தேய்மானத்தை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் 100% ஆறுதல் தொகை ரொக்க இழப்பீடாக வழங்கப்படும். | கட்டிடத்தின் ஒரு பகுதி பாதிப்படைந்திருந்து, எஞ்சியுள்ள பகுதியை பயன்படுத்த முடியாது என்ற நிலையில் இருந்தால், ஒட்டு மொத்த கட்டுமானத்திற்கும் இழப்பீடு கோர உரிமை உண்டு. (*) |
| | | ஆ | கட்டுமான இடிபொருள்களை எடுத்து செல்லும் உரிமை உண்டு. | |
| | | இ | வணிக இழப்பீடு / சுய வணிகம் பாதிக்கப்பட்டவர்க்கு ஒரு முறை உதவித்தொகையாக ரூ.34,980/- வழங்கப்படும். | கட்டுமான உடைமையாளரும் வணிக உடைமையாளரும் வெவ்வேறாக இருந்தால் இந்த வணிக இழப்பீடு / சுய வணிக இழப்பீடு மான்யம் வணிக |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | | உடைமையாளருக்கு வழங்கப்படும் |
| | | ஈ | திட்டத்தினால் பாதிக்கப்பட்டு வணிக இடமாற்றம் செய்ய வேண்டிய குடும்பத்திற்கு ஒரு முறை உதவித்தொகையாக பிழைப்பூதியமாக ரூ.50,370/- வழங்கப்படும். | |
| | | **ஊ** | திட்டத்தினால் பாதிக்கப்பட்டு வணிக இடமாற்றம் செய்ய வேண்டிய குடும்பத்திற்கு இடம் பெயர உதவித் தொகை (shifting Allowance) ரூ.69,950/- வழங்கப்படும். | |
| | | **ஊ** | வணிக இடமாற்றம் செய்ய வேண்டிய பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.69,950/- ஒரு முறை உதவித்தொகையாக ''மறு குடியமர்வு உதவித்தொகை'' வழங்கப்படும். | |
| | | எ | கையகப்படுத்தப்பட்ட வணிக கட்டுமான உரிமையாளருக்கு, இதன்மூலம் கிடைக்கும் வணிக வருமானம் அல்லது வாடகை வருமானம்தான் முதன்மையான வருமான ஆதாரமாக இருந்து, இந்த கையகப்படுத்துதல் மூலம் அவர்களுடைய வாழ்வாதாரம் பதிக்கப்படும் நிலையில், வருடாந்திர உதவிதொகைக்குப் பதிலாக, அவர்களுக்கு, ஒரே தவணையாக ரூ.**5,82,020/–** வழங்கப்படும். | எந்தவொரு பாதிக்கப்பட்ட குடும்பமும், தங்களது வாழ்வாதாரமாக, (கையகப்படுத்தும் வணிக கட்டுமானத்தால் குடும்பத்தின் ஆண்டு வருமானத்தில் **1/3** பங்கு இழப்பு ஏற்பட்டால்) கையகப்படுத்தப்படும் வணிக கட்டுமானத்திலிருந்து கிடைக்கும் வணிக அல்லது வாடகை வருமானத்தையே முதன்மையான ஆதாரமாக நம்பியிருந்தால், அது வாழ்வாதார |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | | இழப்பாகக் கருதப்படும். |
| 4 | **வாடகைக்கு இருப்போருக்கு ஏற்படும் இழப்பு (குடியிருப்பு/வணிகம்/விவசாயம் )** | **அ** | **4.1 குடியிருப்பு**<br>வாடகை குடியிருப்பை விட்டு வெளியேற போதிய காலம் அவகாசம் கொடுத்து முன் அறிவிப்பு செய்யப்படும். | |
| | | **ஆ** | கிராமப்புறமாக இருந்தால் ஒரு மாதத்திற்கு ரூ.4,200/- வீதம் நகர்புறமாக இருந்தால் ரூ.5,600/- வீதம் ஆறு மாதங்களுக்கு வாடகைப் படியாக (Rental Allowance) வழங்கப்படும். | |
| | | **இ** | இடம்பெயர்வதற்கு உதவித்தொகையாக ரூ.13,990/- வழங்கப்படும். | |
| | | **அ** | **4.2 வணிகம்**<br>வாடகைக் கடையை விட்டு வெளியேற ஒருமாத காலம் அவகாசம் கொடுத்து முன் அறிவிப்பு செய்யப்படும். | |
| | | **ஆ** | கிராமப்புறமாக இருந்தால் ஒரு மாதத்திற்கு ரூ.5,600/- வீதம் நகர்புறமாக இருந்தால்ரூ.8,390/- வீதம் ஆறு மாதங்களுக்கு வாடகைப் படியாக (Rental Allowance) வழங்கப்படும். | |
| | | **இ** | இடம் பெயர்பவர்களுக்கு உதவித்தொகை ரூ.13,990/- வழங்கப்படும். | |
| | | **ஈ** | கட்டிட உரிமையாளர்களுக்கு பதிலாக வாடகைக்கு இருக்கும் வணிகதாரருக்கு, வணிக | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | இழப்பீட்டிற்காக/சுய வணிக இழப்பீட்டிற்காக மேலே 3(இ)ல் கூறப்பட்டுள்ளவாறு ஒரே தவணை மான்யம் ரூ.34,980/- வழங்கப்படும். | |
| | | அ | **4.3 விவசாய குத்தகைதாரர்கள்:** விவசாய குத்தகைதாரர்களைப் பொறுத்தமட்டில் பயிர்களை அறுவடை செய்து கொள்ள, முன் அறிவிப்பு கொடுக்கப்படும். அல்லது சந்தை மதிப்பின் அடிப்படையில் விவசாயத்துறை நிர்ணயம் செய்யும் பயிர் இழப்பீடு வழங்கப்படும். | |
| 5 | **மரங்கள், பயிர்கள், பல்லாண்டு பயிர்கள் மற்றும் மற்ற சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்** | அ | பயிர்களை அறுவடை செய்துகொள்ள 90 நாட்கள் அவகாசம் கொடுத்து முன் அறிவிப்பு கொடுக்கப்படும். (அல்லது) இழப்பீட்டிற்கு உள்ளான பயிரின் மகசூல் அடிப்படையில் வேளாண்மைத்துறை அளிக்கும் மதிப்பீட்டின் படி சந்தை மதிப்பிற்கு நிகரான ஒட்டுமொத்த தொகை வழங்கப்படும். | |
| | | ஆ | வனத்துறை நிர்ணயிக்கும் சந்தை மதிப்பின்படி மரங்களுக்கும், மற்ற பல்லாண்டு பயிர்களுக்கு, தோட்டக்கலைத்துறை நிர்ணயம் செய்யும் மதிப்பின்படியான தொகையுடன் 100 சதவிகித ஆறுதல் தொகையும் சேர்த்து இழப்பீடு வழங்கப்படும். | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | இ | பாசனத்திற்குரிய கிணறுகள் இழப்பு, பொதுப்பணித்துறையின் அன்றைய தேதியிலான "விலை நிர்ணய அட்டவணை" ப்படி (Schedule of Rates) இழப்பீடும் 100 சதவிகித ஆறுதல் தொகையும் வழங்கப்படும். | |
| **பிரிவு –2 மகளிருக்கான கூடுதல் உதவி (சட்டப்படியான உரிமை உள்ளவர்கள் / உரிமை இல்லாதவர்கள் )** | | | | |
| 6 | **நிலம்/குடியிருப்பு/வணிகம்– இழப்பு** | அ | நில இழப்பீட்டு உதவித்தொகை இதர மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உதவித்தொகையைக் கொண்டு தீர்ப்பாணை தேதியிலிருந்து 3 ஆண்டு காலத்திற்குள் பெண்களின் பெயரில் வாங்கப்படும் சொத்திற்கு முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்திற்கான செலவு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும். | |
| **பிரிவு–3 சட்டப்படி உரிமை இல்லாதவர்கள் (பொது இடத்தை ஆக்கிரமித்தவர்கள் )/தனது சொந்த இடத்திற்கு அருகில் உள்ள இடத்தை ஆக்கிரமித்தவர்கள்.** | | | | |
| 7 | **பொது இடத்தை ஆக்கிரமித்துள்ளவர்களின் இழப்பு (squatters)** | அ | **7.1 குடியிருப்பு இழப்பு:** பொதுப் பணித்துறையின் அன்றைய தேதியிலான "விலை நிர்ணய அட்டவணை"ப்படி தேய்மானத்தை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் கட்டுமானத்திற்கு இழப்பீடு கொடுக்கப்படும். | |
| | | ஆ | இடிபொருள்களை எடுத்துச் செல்லும் உரிமை அளிக்கப்படும். | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | இ | இடம் பெயர்பவர்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு உதவித் தொகையாக ரூ, 97,930/– வழங்கப்படும். குடியிருப்பு நிலம் இல்லாதவர்களுக்கு, கூடுதல் உதவியாக ரூ.96,950/– வழங்கப்படும். | பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒரு குழுவாக இணைந்து தாங்களாகவே இடமாற்றம் செய்துகொண்டாலோ அல்லது திட்ட உதவியுடன் இடமாற்றம் செய்தாலோ, திட்டத்தின் மூலம், அவர்களுக்கான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் மறு குடியமர்வு இடத்தில் செய்து தரப்படும் |
| | | ஈ | ஒருமுறை பிழைப்பூதியமாக ரூ.25,180/- வழங்கப்படும். | |
| | | உ | இடம்பெயர உதவித்தொகையாக ரூ.13,990/-வழங்கப்படும். | தங்கள் சொந்த இடத்தில் இருந்து இடமாற்றம் செய்யப்படும் போது அவர்களுக்கு போதுமான கால அவகாசம் வழங்கப்படும். |
| | | அ | **7.2 கடை இழப்பீடு:** பொதுப்பணித்துறையின் அன்றைய தேதியிலான "விலை நிர்ணய அட்டவணை"ப்படி தேய்மானம் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் கட்டுமானத்திற்கு இழப்பீடு கொடுக்கப்படும். | |
| | | ஆ | இடிபொருள்களை எடுத்துக் கொள்ளும் உரிமை அளிக்கப்படும். | |
| | | இ | பாதிக்கப்பட்ட கடையின் மறுகட்டுமானத்திற்கு ஒரே முறை மறுவாழ்வு உதவித்தொகையாக ரூ.27,980/- வழங்கப்படும். | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | ஈ | பிழைப்பூதியமாக ரூ.25,180/- வழங்கப்படும். | |
| | | உ. | இடம்பெயர,உதவித்தொகையாக ரூ.13,990/-வழங்கப்படும். | |
| | | ஊ | **சாலையோர தற்காலிக சிறு பெட்டிகடைகளுக்கான (Kiosk) தாக்கம்:** சாலையோர தற்காலிக சிறு பெட்டி கடை பாதிக்கப்பட்டு இடம் பெயர வேண்டியதாக இருந்தால் அவர்களுக்கு மறுவாழ்வு உதவித்தொகை ரூ.20,950/- ஒரு முறை வழங்கப்படும். | |
| | | அ | **7.3 விவசாயம்:** பயிர்களை அறுவடை செய்ய இரு மாதங்களுக்கு முன் அறிவிப்பு அல்லது பயிருக்கு உள்ள சந்தை மதிப்பின்படி இழப்பீடு வழங்கப்படும். | |
| 8 | **தனது சொந்த இடத்திற்கு அருகில் உள்ள இடத்தை ஆக்கிரமித்துள்ளவர்களின் (Encroachers) இழப்பு** | அ | **8.1 விவசாயம்** பயிர்களை அறுவடை செய்து கொள்ள இரு மாதங்களுக்கு முன் அறிவிப்பு அல்லது முன் அறிவிப்பு கொடுக்காவிட்டால் சந்தை மதிப்பின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படும். | பயிர்களின் சந்தை மதிப்பின்படி இழப்பீட்டை தனி மாவட்ட வருவாய் அலுவலரும், வேளாண்மை (அல்லது) தோட்டக்கலைத்துறையும் கலந்தாலோசித்து முடிவு செய்வார்கள். |
| | | அ | **8.2 கட்டுமானம்** ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டுமானத்தை இடிக்க ஒரு மாத கால அவகாசத்துடன் முன் அறிவிப்பு கொடுக்கப்படும். | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | ஆ | பொதுப் பணித்துறையின் அன்றைய தேதியிலான ''விலை நிர்ணைய அட்டவணை''படி தேய்மானம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் கட்டுமானத்திற்கு இழப்பீடு கொடுக்கப்படும். | |
| பிரிவு–4 வாழ்வாதார வாய்ப்புகள் இழப்பு | | | | |
| 9 | **விவசாயம் சாராத் தொழிலாளர்களின் வேலை இழப்பு (அல்லது) விவசாய தினக்கூலி இழப்பு (அல்லது) மற்ற கூலி ஆட்கள் வேலை இழப்பு** | அ | விவசாய கூலிக்கு இணையான பிழைப்பூதியம் மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும். | முழு நேர விவசாயத் தொழிலாளர்களாக இருப்பவர்கள்/ நில உடைமையாளரிடம் நிரந்தர வேலைவாய்ப்பில் உள்ளவர்கள்அல்லது வணிக நிறுவனங்களில் முழுநேர வேலைவாய்ப்பில் உள்ளவர்கள் மட்டுமே இந்த உதவித்தொகையை பெற முடியும். பருவகால விவசாயத் தொழிலாளர்கள் இந்த உதவிகளைப் பெற முடியாது. |
| 10 | **பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வாழ்வாதார ஆதரவு** | அ | பாதிக்கப்பட்ட அனைவருக்கும், அரசாங்க சமூக பாதுகாப்பு திட்டங்களிலும் நடைமுறையில் உள்ள வேலைவாய்ப்பு திட்டங்களிலும் இணைப்பதற்கு தேவையான குடும்பத்தில் உள்ள அனைத்து வயது வந்து உறுப்பினர்களுக்கும் கிடைக்க வழிவகை செய்யப்படும். | மறு குடியமர்வு செயல் திட்டத்தை அமலாக்க நியமிக்கப்பட்ட அரசு சாரா அமைப்பு, தேவைகளை மதிப்பீடு செய்து, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். |
| பிரிவு–5 ஊறுபடக்கூடிய வகையினர் **(Vulnerable)** | | | | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| 11 | **ஊறுபடக்கூடிய நிலையில் உள்ள குடும்பங்கள்** | அ | திறன் மேலாண்மை (skill development) பயிற்சி அளிக்கப்படும். இந்த பயிற்சியானது பயிற்சிக்கான கட்டணம், பயணம் வழிச்செலவு மற்றும் உணவுக்கான நிதியுதவிகள் அனைத்தும் உள்ளடக்கிய உதவியாக இந்த உதவி இருக்கும். | வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் உள்ள வயதுக்கு வந்தவர்கள் அனைவரும் ‘‘இந்த திறன் மேலாண்மை’’ பயிற்சிக்கு தகுதியானவர்கள் ஆவார்கள்.<br><br>இடம் பெயர்க்கப்பட்டோரை அடையாளம் காண மேற்கொள்ளப்பட்ட 100 சதவிகித மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தகுதியான மற்றும் பாதிக்கப்படும் இடம் பெயர்க்கப்பட்டோரை நில எடுப்பு அலகு, திட்டச் செயலாக்கப் பணியில் உதவி புரியும் அரசுசாரா நிறுவனங்களின் உதவியுடன் கலந்து ஆலோசித்து அவர்களது திறமைக்கும், அவர்கள் வசிக்கும் பகுதிக்கும் ஏற்ற பயிற்சிகள் வழங்கப்படும். திட்ட செயலாக்கப்பணியில் உதவி புரியும் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் பொருத்தமான பயிற்றுனர்களை ‘‘நில எடுப்பு அலகு’’ அடையாளம் காணும். |
| | | ஆ | அதிகமாக பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு முறை உதவித்தொகையாக ரூ.7000/– வழங்கப்படும். | |
| | | இ | இடம் பெயர்க்கப்பட்ட ஊறுபடக்கூடிய குடும்பங்களில், அரசின் நலத்திட்டங்களைப் பெறத் தகுதி உடையவர்கள் என்று கண்டறியப்பட்டால், இதுவரை அவர்கள் அத்திட்டத்தின் மூலம் உதவி பெறவில்லை என்றால் அந்நலத்திட்டத்தில் இணைக்கப்படுவார்கள். | |
| **பிரிவு–6 பொருந்தக்கூடிய கொள்கையில் மாற்றம் காரணமாக நிலைத்தன்மைக்கான கூடுதல் ஏற்பாடு** | | | | |
| 12 | **நில உரிமையாளர்கள்** | அ | 24.01.2019–க்கு பிறகு கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு பெருக்கல் காரணியில் உள்ள 12 | |

| வ எண் | பாதிப்புகளின் வகை | பாதிப்புகளுக்கான இழப்பீடு / மற்றும் உதவிகள் | | செயலாக்க வழிகாட்டி |
|---|---|---|---|---|
| | | | சதவிகித கூடுதல் சந்தை மதிப்பு, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வின் கீழ் சிறப்பு மானியமாக வழங்கப்படும். | |
| **பிரிவு–7 எதிர்பாராத பாதிப்புகள்** | | | | |
| இத்திட்ட செயலாக்கத்தின் போது எதிர்பாராத பாதிப்புகள் ஏற்பட்டால் அவை இந்த ''மறு குடியமர்வு செயலாக்க கொள்கை'' அடிப்படையில் தீர்வு காணப்படும். | | | | |
| ( * ) நில எடுப்புக்குள்ளான கட்டிடத்தின், பாதிக்கப்படாத பகுதி, பாதுகாப்பில்லாத அல்லது உபயோகப்படுத்த/ வசிக்க இயலாத அல்லது சாலையிருந்து போதுமான இடைவெளி இல்லாமல் இருந்தால் மட்டுமே பாதிக்கப்படாத கட்டிடம் உட்பட மொத்த கட்டிடத்திற்கும் இழப்பீடு கோர இயலும். அவ்வாறு கோரிய வண்ணம் இழப்பீடு வழங்கப்படும் பட்சத்தில், . இழப்பீடு பெற்ற 30 நாட்களுக்குள் மொத்த கட்டிடத்தையும் / கட்டுமானத்தையும் இடித்துவிடுகிறேன் என்ற உறுதிமொழியினை (உறுதிமொழிப் பத்திரம் மூலம்). பாதிக்கப்பட்ட கட்டிட உரிமையாளரின் கோரிக்கை, முகாந்திரம் இல்லாததாக இருந்தால் அந்த கோரிக்கையை நிராகரிக்கும் உரிமை கோட்டப் பொறியாளருக்கு உண்டு. | | | | |

**மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு தீர்ப்பாணை**

**11.** மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பின் (RPF) “உரிமை வழங்கல் அட்டவணை” அடிப்படையில், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வுத் தீர்ப்பாணையை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பிப்பார். இத்தீர்ப்பாணையுடன், பாதிக்கப்பட்டோரின் பெயர்கள் பட்டியலிட்டு, அவர்களுக்குரிய மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உதவித் தொகைகள் வெளியிடப்படும். நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு அலகுகள், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கோட்டப் பொறியாளர் அலுவலகம், மற்றும் உள்ளாட்சி அமைப்பு சம்பந்தப்பட்ட அலுவலகம் ஆகிய முக்கிய இடங்களில் இத்தீர்ப்பாணை வெளியிடப்படும்.

**நிறுவனரீதியான ஏற்பாடுகள்**

**12.** நிலம் கையகைப்படுத்துதல் மற்றும் சாலைத் திட்டத்தின் மறு குடியமர்வு செயலாக்கப் பணிகளை துரிதப்படுத்துவதற்காக, மூன்று இடங்களில், மண்டல அளவிலான ‘‘நில கையகப்படுத்தல் மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு அலகுகள்’’ உருவாக்கப்பட்டுள்ளன. இந்த அலகுகள் ஒவ்வொன்றும் தனி மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில் இயங்கும். அத்துடன் மறு குடியமர்வு செயலாக்கத் திட்டத்தின் பணிகளை மேற்கொள்வதில் இவருக்கு உதவியாக, ‘‘மறு குடியமர்வு அதிகாரி’’ ஒருவரும், நிலம் கையகப்படுத்தும் பணிகளில் உதவுவதற்கு தனி வட்டாட்சியரும் இருப்பார்கள். மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வுப் பணிகளுக்கு ஒட்டு மொத்த பொறுப்பாக உள்ள தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர், மறு குடியமர்வுத் திட்ட செயலாக்கத்திலும், நிலம் கையகப்படுத்தும் பணிகளிலும், இந்த மூன்று அலகுகளின் தனி மாவட்ட வருவாய் அலுவலர்களை ஒருங்கிணைத்து செயல்படுவார். திட்ட இயக்குநரின் அலுவலகத்தில் பணிபுரியும் தலைமைப் பொறியாளர், நிலம் கையகப்படுத்துதல், சமூக வளர்ச்சி பணிகள், மறு குடியமர்வு மற்றும் மறுவாழ்வுப் பணிகளில் முன் அனுபவம் உள்ள வல்லுனரின் உதவியுடன் செயல்படுவார்.

**13.** நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு அலகுகளுக்கு, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு திட்டத்தை செயல்படுத்துவதற்கு, தன்னார்வு அமைப்புகள் அல்லது அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் உதவி செய்வார்கள். நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு, மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றில் அனுபவம் கொண்ட நிறுவனம் / அரசு சாரா அமைப்பு / முகமை, இத்திட்டத்தின் நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு

செயல்பாடுகளை மேற்பார்வையிடுவதற்கும், வழிகாட்டுதல்களை வழங்குவதற்கும் நியமிக்கப்படுவார்கள்.

**குறை தீர்க்கும் குழு**

**14.** பாதிக்கப்பட்டோரின் புகார்கள் மற்றும் குறைகளைப் பெற்று, ஆராய்ந்து மற்றும் தீர்ப்பதற்கு வசதியாக இரண்டடுக்கு குறை தீர்க்கும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. முதல் அடுக்கில், மண்டல அளவிலான குறை தீர்க்கும் குழுக்கள், சென்னை, திருச்சி, சேலம் ஆகிய மூன்று இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது அடுக்கு, திட்ட இயக்குனரின் தலைமையில், மேல்முறையீடு தீர்ப்பாணையமாக செயல்படும்

**15.** மண்டல அளவில், நான்கு நபர்களைக் கொண்ட குறை தீர்க்கும் குழு, ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் (அல்லது) அவரது பதவிக்கு இணையான ஒருவர் தலைமையிலும் சம்மந்தப்பட்ட தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கோட்டப் பொறியாளர் குழுவின் உறுப்பினர் செயலராகவும் கொண்டு, சம்மந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலர் ஒரு உறுப்பினராகவும் மற்றும் மாவட்ட ஆட்சியரால் நியமிக்கபட்ட, அப்பகுதியின் சமுதாயத்தில் மரியாதையும் மதிப்பும் மிக்க ஒருவர் மற்றொரு உறுப்பினராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. மாநில அளவில், திட்ட இயக்குநர் மேல் முறையீட்டு தீர்ப்பாணைய அதிகாரியாக செயல்படுவார் .

**சாலைக் கட்டுமானப் பணிகளுடன் ஒருங்கிணைத்தல்**

**16.** நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு செயற்பாடுகள், சாலைப்பணிகளுக்கான ஒப்பந்த செயல்முறை மற்றும் சாலை கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்கான கால அட்டவணைக்கேற்றவாறு செயல்படுத்தப்படும். இரண்டு அல்லது மூன்று கட்டங்களாக ஒப்பந்ததாரரிடம் நிலம் ஒப்படைக்கப்படும். முதல் கட்டமாக, சுமார் 60 சதவிகித நிலம், சாலைப் பணிகளுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட உடனேயே ஒப்படைக்கப்படும், மீதமுள்ள நிலம் இரண்டாவது கட்டமாக, 12 மாதங்களுக்குள் ஒப்படைக்கப்படும் மற்றும் மூன்றாவது கட்டமாக, புறவழிச் சாலை மற்றும் மாற்றுவழி ஏதேனும் இருந்தால், ஒப்பந்தம் கையெழுத்திட்ட 18 மாதத்திற்குள் ஒப்படைக்கப்படும். நிலம் கையகப்படுத்துதல் மற்றும் அதற்குறிய இழப்பீடு, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உதவி ஆகியவை வழங்கப்பட்டு, முதல் கட்ட சாலை கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்கான

இடையூறில்லாத சான்றிதழ், சாலைப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் பெற்றிருக்க வேண்டும். மேலும் இரண்டாவது கட்டத்திற்கான நிலம் கையகப்படுத்துவதற்கு தேவையான அறிவிப்புகளும் நிறைவு பெற்றிருக்க வேண்டும் மற்றும் மறு குடியமர்வு இடங்களில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு 6 மாதத்திற்குள் கட்டுமானங்கள் முடிவு பெறக்கூடியவையாக இருக்கவேண்டும்.

**மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பின் வெளியீடு**

**17.** தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின், திட்ட அமலாக்க பிரிவு, 2014இன் வரைவு மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பினை இணைய தளத்தில் 2014 ஆ ம் ஆண்டில் வெளியிட்டு, வரைவு மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பின் சுருக்கத்தை பொதுமக்களுடன் பகிர்ந்து அதன் அடிப்படையில் கருத்தாய்வு கூட்டங்கள் நடத்தி, பொதுமக்கள் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்று, ‘‘மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பு’’ இறுதி செய்யப்பட்டது.

**18.** திருத்தங்கள் உள்ளடக்கிய, 2020 ஆ ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ‘‘வரைவு மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பு’’, பொது மக்களின் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கோரி, பிப்ரவரி 27, 2020 அன்று தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இணையதளத்தில் வெளியிடப்பட்டது. மேலும் கூடுதல் நிதி உதவியுடன் மேம்படுத்தப்பட உள்ள சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில், பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடைபெற்றது. இதற்கு முன்னதாக, நில நிர்வாகத் துறை, வருவாய்த் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுடன் விரிவான கலந்துரையாடல்களை நடத்தி, 2020ம் ஆண்டின் ‘‘வரைவு மறு குடியமர்வு கொள்கைக் கட்டமைப்பு பற்றிய கருத்துக்கள் கேட்டறியப்பட்டது. கலந்தாய்வு மற்றும் கலந்துரையாடல் அடிப்படையில் மறு குடியமர்வுக் கொள்கை கட்டமைப்பு இறுதி செய்யப்பட்டு தமிழக அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதே நேரத்தில், பொது மக்களின் பார்வைக்கும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

**19.** இந்த மறு குடியமர்வு கொள்கை கட்டமைப்பானது, நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு தொடர்பான சட்டங்கள் மற்றும் கொள்கைகளில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் செய்யப்படும்போதும், செயல்படுத்துதலில் கிடைக்கப் பெற்ற அனுபவம் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையிலும் திருத்தப்படும்.